விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 272 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 01 புதன்கிழமை (17.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-3900)
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
0217534 807

## தியாக தீபம் திலீபனின் 2ஆம் நாள் நினைவேந்தல்



15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் ஜனாதிபதிகளின் சொத்துக்களை பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தத் திட்டம்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அரச சொத்துக்கள் முழுமையாகப் பெறப்பட்டதன் பின்னர் அவற்றைப் பொருளாதார ரீதியில் பயனுள்ளதாகப் பயன்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே

15ஆம் பக்கம் பார்க்க

### - பாதாள உலகத் தலைவரைக் கொல்ல -

# கிளைமோர் குண்டு தாக்குதல் திட்டம்

### விசாரணையில் வெளியான அதிர்ச்சித் தகவல்கள்

(கொழும்பு)

பாதாள உலகத் தலைவர் ஹரக் கட்டாவை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும்போது சிறைச்சாலை பஸ்ஸை குறிவைத்து கிளைமோர் குண்டுத் தாக்குதலை நடத்தி கொல்லத் திட்டமிட்டிருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. கெஹல்பத்தர பத்மே கமாண்டோ சாலிந்தா உள்ளிட்ட பாதாள உலகக் கும்பலே இந்தத் திட்டத்தை தீட்டியிருந்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில்

### 524 பெண்கள் கைது

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 524

15ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் வாள்வெட்டு இருவர் காயம்: ஒருவர் கைது

### பொலிஸார் மீதும் தாக்குதல் முயற்சி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இடம்பெற்ற வாள்வெட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நெடுந்தீவில் உள்ள தனியார் விருந்தக விடுதியில் நேற்று இரவு 7.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க

## சீனத் தூதுவர் மைத்திரியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஹெக்டர் கொப்பேகடுவ

02ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.பல்கலைக்கழகத்துக்கு

## 2,234 மில்லியன் செலவில் நவீன வசதிகளுடன் புதிய கட்டிடம்

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கு விரிவுரை மண்டபங்கள், ஆய்வகங்கள் மற்றும் கேட்போர் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஐந்து மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 2,234 மில்லியன் ரூபாய் ஆகும்.

கல்வி, உயர்கல்வி மற்

15ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலை நடத்துங்கள் மக்கள் பாடம் புகட்டுவர்

### எதிர்க்கட்சித் தலைவர் அரசுக்கு சவால்

(திருகோணமலை)

மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் மக்கள் சிறந்த பாடம் புகட்டுவர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்துக்கு சவால் விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டம், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் கிராம விவசாயிகளின் காணிப் பிரச்சினைகளை ஆராயும் நோக்கு

02ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் பிடிபட்ட 250 கிலோ சுறா மீன்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அருகாமையில் இருந்து தூண்டில் தொழிலில் ஈடுபட்ட மீனவர் ஒருவருக்கு பாரிய சுறா ஒன்று சிக்கியுள்ளது.

இவ்வாறு பிடிபட்ட சுறா மீன் 250 கிலோவுக்கு அதிக எடைகொண்டதாகக் காணப்பட்டது. இதன் சந்தை மதிப்பு சுமார் இரண்டரை இலட்சத்திற்கு அதிகம் என மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

# யாழ். மீன் சந்தையில் மின்சாரம் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மீன் சந்தையின் மின்சாரமானது நேற்று துண்டிக்கப்பட்டதால் மீன் வியாபாரிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

மாநகர சபையினர் மின்சார சபைக்கு மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால் நேற்று மதியம் மீன் சந்தையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் மீனவர்கள் தமது மீன்களை விற்பனை செய்வதில் சிரமத்தை எதிர் நோக்கினர்.

இரவு மீன்களை விற்பனை செய்ய முடியாமல், இலக்க முறை நிறுவை தராசுகள் பயன்படுத்த முடியாமல், மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி சந்தையைக் கழுவ முடியாமல் மீன் வியாபாரிகள் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கினர்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் மின்சார சபையினருடன் தொடர்பு கொண்டு மின்சார இணைப்பை மீளவும் பெற்றுக் கொடுத்தார். (ம-7,104)

# வவுனியாவில் விபத்து; பெண் ஒருவர் படுகாயம்

வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து வவுனியா தினச்சந்தை கட்டடத்திற்கு முன்பாக உள்ள பாதசாரிகள் கடவைக்கு அருகில் நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த பெண் புறப்படுவதற்குத் தயாராக வீதியின் கரையில் நின்றுள்ளார். இதன்போது வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் இருந்து ஹொறவப் பொத்தானை திசை நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் அவரை மோதியுள்ளது.

விபத்தில் குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனம் நிறுத்தாமல் சென்றுள்ளதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ம-7,250)

# 40 ஆயிரம் மெட்ரிக்தொன் கீரிச்சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி

(கொழும்பு)

40 ஆயிரம் மெட்ரிக் தொன் கீரிச்சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில், கீரிச்சம்பா பற்றாக்குறை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகள் அறுவடைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துள்ளனர். இருப்பினும் கீரிச்சம்பாவைப் பயிரிடுதல் 7% மட்டுமே உள்ளது.

இதனால் அதன் உற்பத்தி அளவு குறைந்துள்ளது. ஆனால் ஒட்டுமொத்த நெல் உற்பத்தியில் எந்தப் பற்றாக்குறையும் இல்லை.

பாரியளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் கீரிச்சம்பாவை கையிருப்பில் வைத்திருக்கிறார்களா? என்பது குறித்து தற்போது தெளிவான தகவல்கள் இல்லை.

மேலும் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் கீரிச்சம்பாவை இறக்குமதி செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் அந்தத் தொகையை இறக்குமதி செய்யலாம். இருப்பினும் இதற்கான இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை என்றார். (ம-7)


# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 06 - 1951



மறைவு 14 - 09 - 2025

## பாலசுப்பிரமணியம் தவமணி

டச்சு வீதி சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பாலசுப்பிரமணியம் தவமணி கடந்த (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (17.09.2025) அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு வீதி,
சித்தங்கேணி.

தகவல்: குடும்பத்தினர்
077 [illegible]

(C-3895)


## சீனத்தூதுவர்...

மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் எதிர்கால அரசியல் நிலைமை குறித்தும் அங்கு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு முன்பு சீனத் தூதுவர் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். (ம-7)

## தேர்தலை...

டன் அப்பகுதிக்கு நேற்று விஜயம் செய்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராவதாகக் கூறுகிறார்கள். தேர்தலை நடத்துமாறு நாங்களும் கூறுகிறோம். மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள். திருகோணமலை மக்கள் மட்டுமல்ல, முழு நாட்டு மக்களும் அரசாங்கத்திற்கு தகுந்த பாடம் புகட்டக் காத்திருக்கின்றனர்.

அரசாங்கத்துக்குப் பதிலளிக்க நாட்டு மக்கள் தயாராகவுள்ளனர். எனவே உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். (ம-7)


# அலுவலக தளபாடங்கள் விற்பனைக்குண்டு

இடம்:- குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் யாழ்ப்பாணம் காரியாலயம்

முகவரி:- தல்லக்கடி வீதி, புகையிரத நிலையம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

மேற்படி முகவரியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் தளபாடங்கள் மலிவு விற்பனைக்குண்டு எதிர்வரும்

17.09.2025 - 29.09.2025

கிழமை நாட்கள் காலை 8.30 மாலை 4.30 பார்வையிடலாம்

தொடர்புகளுக்கு 021 226 1122

(C-3891)


## நெடுந்...

வாள்வெட்டுத் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அங்கு சென்ற போது பொலிஸார் மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாள் வெட்டுத் தொடர்பில் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு நீதி கோரி ஜெனிவாவில் பேரணி!

(ஜெனீவா)

**இலங்கையின் இனப்படுகொலைக்கு நீதி மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கைகளை முன்வைத்து சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நேற்று முன்தினம் ஒரு பாரிய பேரணி நடைபெற்றது.**

நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் தேசத்திற்கு எதிராக இனப்படுகொலையை நடத்தியதற்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்துவதற்காக நூற்றுக்கணக்கான தமிழர்கள் இந்த பேரணியில் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அரச அதிகாரிகளுக்கு டிஜிற்றல் கையொப்பம்




(கொழும்பு)

அரச அதிகாரிகளுக்கு அலுவலகப் பணிகளை எளிதானதாகவும் வினைத்திறனானதாகவும் மாற்ற டிஜிட்டல் கையொப்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன கூறுகையில்,

தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் பொதுச் சேவைகளை டிஜிற்றல் மயமாக்கி புதிய பாதைக்குக் கொண்டு செல்வதுதான் எனத் தெரிவித்தார்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டு அலுவல்கள் பிரிவின் பொது அதிகாரிகளுக்கான டிஜிற்றல் கையொப்பங்களை அங்கீகரிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் பங்கேற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் எதிர்பார்க்கும் திறமையான பொதுச் சேவையை உருவாக்குவதே தனது நோக்கம் என்றும், இந்த புதிய தொழில் நுட்பத்தைக் கிராம சேவையாளரிடம் எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி)

# மின்சார சபை ஊழியர்கள் இழப்பீட்டுடன் வெளியேறலாம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு பணிகள், அதன் ஊழியர்களின் வேலைப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி நேற்று முன்தினம் உறுதியளித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர், மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், CEB நான்கு நிறுவனங்களாகப் பிரிக்கப்படும் என்றும், ஆனால் நான்கு நிறுவனங்களும் 100 சதவீதம் திறைசேரிக்குச் சொந்தமானதாகவே இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் புதிய மறுசீரமைப்பின் கீழ் தொழில்புரிய விரும்பாத ஊழியர்கள் இழப்பீட்டுத் தொகையுடன் வெளியேறலாம். அவ்வாறு தமது பதவியை இராஜினாமா செய்பவர்களுக்கு அதிகபட்சமாக ரூ. 5 மில்லியன் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

சில தொழிற்சங்கங்கள் எழுப்பிய கவலைகளுக்கு பதிலளித்த அமைச்சர், சில குழுக்கள் மறுசீரமைப்பு செயல்முறையை தவறாகப் புரிந்து கொண்டு உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் தொழில் துறை நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

மறுசீரமைப்பின் விளைவாக எந்த ஊழியரும் வேலையை இழக்க மாட்டார்கள் என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார். (நி)

Airport & Aviation Services (Sri Lanka) Limited

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

### வீடுகள்/கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் /கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பலாலி / காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை/உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை.
03. அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்களுடன் இருத்தல் வேண்டும். (தளபாடங்கள், வீட்டுப் பொருட்கள், மின்சாதனங்கள், சமையலறைப் பாத்திரங்கள் போன்றவை)
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்
06. அனைத்து பராமரிப்பு பணிகளையும் வீட்டு உரிமையாளரே செய்ய வேண்டும்.
07. வீட்டிற்கு வெளியே சுத்தம் செய்யும் பணியை வீட்டு உரிமையாளர் செய்ய வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்கு பொருத்தமான அணுகுமுறையை ஏற்பாடு செய்து தொடர்ந்தும் பேணப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டிடங்கள் முதலாவதாக ஒரு வருட காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**01. வீடுகள்/ கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) | வீட்டு /கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | பலாலி விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | அனைத்துவித வீட்டுத்தளவாடங்கள் (உண்டு / இல்லை) |
| 8) | வீட்டின் பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின் / கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாதாந்திர வாடகை. (வீடு/கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)
06. எதிர்பார்க்கப்படும் முற்பணம் (வீடு/ கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வீடுகள் / கட்டிடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு "தவிசாளர், திணைக்கள பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்)கம்பனி கட்டுநாயக்கவிற்கு **2025 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக 011-2263550 / 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

(C-278)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் தேவஸ்தானத்தில் புதிய தேர் இருப்பிட கட்டுமானப் பணிக்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டது. (படம்:- கஜிந்தன்)




தென்மராட்சி மட்டுவில் கிராமத்தில் திருவாசக முற்றோதலில் உலக சாதனை படைத்த பெண்ணிற்கு கலாம் உலக சாதனைப் புத்தகம் விருது வழங்கும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் கலுவம் சிவன் ஆலயத்தில் இடம்பெற்றது. (படம்: சுபேசன்)



மகாகவி பாரதியாரின் 104 ஆவது ஆண்டு நினைவு தினம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியில் அண்மையில் இடம்பெற்றது. (படம்:- கஜிந்தன்)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து கொண்டாடிய 2025 ஆம் ஆண்டிற்கான பண்பாட்டுப் பெருவிழா கடந்த 9 ஆம் தகதி சூரியமஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.



யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகத்தில் நேற்று முன்தினம் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பல்கலைக்கழக மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் பலரும் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர். (படங்கள்:-சிவசாந்தன்)




2025 இற்கான பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய கராத்தே போட்டி கடந்த 12.09.2025 அன்று கொழும்பு பண்டாரகம உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் 20 வயதிற்கு உட்பட்டோருக்கான பிரிவில் காட்டா போட்டியில் பங்கு கொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் விஜயராஜ் தமிழ்நிலவன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.



உடுவில் கல்விக்கோட்டத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டின் பின் ஓய்வு பெற்ற, மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 21 அதிபர்களுக்கான உடுவில் கோட்ட அதிபர் சங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழா கடந்த 11 ஆம் திகதி யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.



சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் நடத்திய வலிமையான பெண்களுக்கு வலுவூட்டும் கரங்கள் செயற்திட்ட கண்காட்சி அண்மையில் கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. (படம்:- யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# படையினர் வசம் இருந்த 30 ஏக்கர் காணி விடுவிப்பு

### அரச அதிபர் எஸ்.முரளிதரன்

**(கண்டாவளை)........................ கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் வசமிருந்த முப்பது ஏக்கர் வரையான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

மேலும் தெரிவிக்கையில், கடந்த 2009 ஆண்டு முதல் பாதுகாப்பு படையினர் வசமிருந்த தனியார் மற்றும் அரச காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்துள்ளன.

அதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 7 ஏக்கர் காணி கடந்த 7 ஆம் திகதி அன்று விடுவிக்கப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த காணி தற்காலிகமாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் கையளிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள சின்னப் பல்லவராயன்கட்டு பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த 20 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள இயக்கச்சி பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்கு சொந்தமான எட்டுப் பேரின் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான காணி மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளத்திற்குரிய காணி என்பன கடந்த காலங்களில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-315)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 19.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
## இலட்சுமணன் நகுலேஸ்வரன்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 18.09.2025 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாய் ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-3893)

சுமதி இல்லம்,
பொன்னம்பல வித்தியாலய வீதி,
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய்.

தகவல்- குடும்பத்தினர்.
074 134 1986


# இராசிபலன்

17.09.2025
புரட்டாதி 01 , புதன்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.10 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 10.00 மணிவரை

சுப நேரம் 4.33 - 6.03 மணிவரை
இராகுகாலம் 12.03 - 1.33 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்
மூலம்.

**வளவன்**

**மேஷம்** — கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர், நண்பர்களின் வருகையுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** — கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** — பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தாரின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**மகரம்** — தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்.

**ரிஷபம்** — தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், கௌரவமும் அந்தஸ்தும் உயரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்** — வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** — சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** — குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**மிதுனம்** — குடும்ப மகிழ்ச்சி கூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கன்னி** — உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செல்வநிலை உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**தனுசு** — தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

**மீனம்** — தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**வாழ்க்கை என்பது அனுபவங்களின் தொகுப்பாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA | | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Grade | Specialty | | |
| 1 | YA/CWP/CW/RE/2025/14 | Refurbishment of Kailasabathy Auditorium, University of Jaffna | 25.99 | 90 | C6 or above | Building Construction | Rs. 300,000.00 03.02.2026 | Rs. 7,500.00 |
| 2 | YA/CWP/CW/RE/2025/15 | Supply and Installation of Air Conditioners for IT Laboratory at Faculty of Arts, University of Jaffna | 5.51 | 60 | C8 or above | | Rs. 56,000.00 03.02.2026 | Rs. 2,000.00 |
| 3 | YA/CWP/CW/RE/2025/16 | Supply and Installation of Air Conditioners for the Dean's Office of the Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts, University of Jaffna | 1.64 | 45 | C9 or above | | Rs. 20,000.00 03.02.2026 | Rs. 1,000.00 |
| 4 | YA/CWP/CW/RE/2025/17 | Supply and Installation of Ceiling Fans at Ananthacumarasamy Hostel, University of Jaffna | 2.64 | 45 | C9 or above | | Rs. 27,000.00 03.02.2026 | Rs. 1,500.00 |
| 5 | YA/CWP/CW/RE/2025/18 | Construction of Entrance Gate at Faculty of Agriculture, University of Jaffna, Ariviyal Nagar, Kilinochchi | 5.97 | 90 | C8 or above | | Rs. 60,000.00 03.02.2026 | Rs. 2,000.00 |
| 6 | YA/CWP/CW/RE/2025/19 | Refurbishment of Three Storied Building at Faculty of Arts, University of Jaffna | 18.18 | 90 | C7 or above | | Rs. 200,000.00 03.02.2026 | Rs. 4,500.00 |
| 7 | YA/CWP/CW/C2/2025/04 | Supply, Installation and Testing of IP based CCTV Surveillance System for CTRB Building Faculty of Medicine, University of Jaffna | 5.98 | 30 | EM4 or above (Electrical & Mechanical Services - Extra Low Voltage Installations) | | Rs. 600,000.00 03.02.2026 | Rs. 2,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for the contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the relevant field with the Construction Industry Development Authority (CIDA), as specified in the table above
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 221 9201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** from **18th September 2025** until **02nd October 2025** from **9:00 hrs to 16:00 hrs and** upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No **"970000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch,** to reach **on or before 10.00 hrs on the 03rd October, 2025.** Bids will be opened soon after closing, at **10.00 hrs on the 03rd October, 2025** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 26th September, 2025 for the bid No. 01 to 04, 06 & Bid No. 07 and at the Engineering Service Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi at 10.00 hrs on the 29th September, 2025 for the bid No. 05.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**17.09.2025**

(C5898)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யா/வறுத்தலைவிளான் அ.மி.த.க பாடசாலை**

உ.அஸ்வின்-153, றே.ஹஸ்வினி - 132

# காலபோகக் கூட்டம்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப்பரப்பிற்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான காலபோகக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் (நெற் செய்கையாளர்கள்) அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (8-30)

# வேகமாகப் பறந்த மோட்டார் சைக்கிள்கள் மடக்கிப் பிடித்தது பொலிஸ்

(வவுனியா)

பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அதிக சத்தத்துடன் வேகமாக சென்ற மோட்டார் சைக்கிள்களுக்கு எதிராக வவுனியா போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


வவுனியா வைரவபுளியங்குளம் பகுதி, பூங்கா வீதி என்பவற்றில் அதிக சத்தத்துடன் வேகமாக மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றை இளைஞர்கள் செலுத்தி வருவதுடன், அப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடுவோர், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தி வந்தனர். அத்துடன் விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் வவுனியா மாநகர சபையால் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து பூங்கா வீதி, வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் கடமையில் ஈடுபட்ட போக்குவரத்து பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிள்களை செலுத்திய சாரதிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். (8-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 170 | 200 |
| தக்காளி | 200 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 240 | 250 | 180 | 250 |
| கரட் | 300 | 300 | 280 | 350 |
| பூசணி | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 100 | 150 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 200-350 | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 600 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 200 | 300 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 200 | 80 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 180 | 400 |
| போஞ்சி | 550 | 350 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 120 | 300 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 60-140 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 1000 | 600 | 1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 230 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 600 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 160 | 150 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்த முடியாவிட்டால் பொறுப்பை எம்மிடம் ஒப்படையுங்கள்

## ரவிகரன் எம்.பி காட்டம்

**(முல்லைத்தீவு)**

**கடற்படை மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் ஆகிய தரப்பினரால் முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் அந்தப் பொறுப்பை தம்மிடம் ஒப்படைக்குமாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைவாக கடற்றொழிலாளர்களுடன் கடலுக்குள் சென்று முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறுவதை நேரடியாக கண்காணித்ததுடன், சட்டவிரோத கடற்றொழில் இடம்பெறுவது தொடர்பான ஆதாரங்களையும் திரட்டியிருந்தார்.

இந்நிலையில் இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மீனவர்களின் கோரிக்கைக்கு அமைவாக கடலிற்கு நேரடியாகச் சென்று சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் திருட்டுக்கும்பல்களை நேரடியாக கண்காணிக்க முடிந்துள்ளது.

இவ்வாறு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் கொள்ளையர்கள்மீது கடற்படையோ, கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களமோ, பொலிஸாரோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை.

இந்தவிடயத்தில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம், கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தி சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களமும், கடற்படையினரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாக கடற்படைஎன்றால் கடலிலே தமது கண்காணிப்புக்களைச் செலுத்தி, கடலில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகளுக்கெதிராக நட வடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு உரியதரப்பினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் மேலும் வலுப்பெற்று வருகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு கடற்பரப்பெங்கும் இரவில் பகல்போல் காட்சியளிக்கின்றது. அந்த அளவிற்கு வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் சட்டத்திற்குட்பட்டு கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றது. சிறுதொழில்களில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களில் பெருமளவானோர் தற்போது கடற்றொழிலுக்குச் செல்வதில்லை.

எனவே கடற்படையும், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களமும் இவ்வாறான திருட்டுக்கும்பல்களைக் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதன்மூலம் சட்டத்திற்குட்பட்டு மீன்பிடியில் ஈடுபடும் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இந்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பில் நேரடியாக திரட்டப்பட்ட ஆதாரங்கள் உரியதரப்பினரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்படுவதுடன் இந்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டை கட்டுப்படுத்த கடுமையான அழுத்தங்களை வழங்குவேன் என அவர் தெரிவித்தார். (8-30)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 11/138 F, மூளாய் 2 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, மூளாய் 2 ஆம் ஒழுங்கையிலுள்ள இல 11/138 F ஆகிய ஆதனம் எனது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **நாகமுத்தன் கணபதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4808/06.10.1959 ஆம் இலக்க உறுதியால் **கார்த்திகேசு கந்தையாவும், கார்த்திகேசு குமாரசாமியும், சுப்பிரமணியம் கைம்பெண் மனோன்மணியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**மாயவன் பிரகலாதனும் பெண் றோகினியும்** ஆகியவர்கள் மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1982/30.06.2009 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகமுத்தன் கணபதி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**மகாலிங்கம் பரியவன் பெண் பிரியமலர்** ஆகியவர் மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6670/11.04.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த **மாயவன் பிரகலாதனும் பெண் றோகினியும்** ஆகியவர்களிடமிருந்து சீதனப் பணமென வெளிப்படுத்தி அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சிவஞானம் கிருஷ்ணஜெகன் பெண் சிந்துஜா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வி.இளங்குமார் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1891/05.06.2024 இலக்க உறுதியால் குறித்த **மகாலிங்கம் பரியவனும் பெண் பிரியாமலரும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"வேரம்"**
இறை: **மூளாய்**
வீஸ்தீரணம்: **நில.பர 02**

எல்லைகள்:
**கிழக்கு:-** மிகுதி ஆதனமும், கிழக்கேயுள்ள ஒழுங்கைக்குப் போகும் நான்கு முழ அகலங்கொண்ட பாதையும்
**வடக்கு:-** அரியகுட்டி புஸ்பராசாவுக்குரிய ஆதனம்
**மேற்கு:-** சிவஞானம் கிருஷ்ணபகவானுக்குரிய ஆதனம்
**தெற்கு:-** காத்தி செல்லத்துரைக்குரிய ஆதனமும் ஒழுங்கையும்

குறித்த **சிவஞானம் கிருஷ்ணஜெகன் பெண் சிந்துஜா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சிவஞானம் கிருஷ்ணஜெகன் பெண் சிந்துஜா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**
(5435)


கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை

பரிசில் நாள்-2025



இன்று 17.09.2025 எமது பாடசாலை
பரிசில் தின நாளில்
க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2024 இல்
9A சிறப்பு பெறுபேறு பெற்ற
எமது பாடசாலை மாணவி

உ.நிலவரசி

அவர்களை மனமார
வாழ்த்துகின்றோம்.

Congratulations

பாடசாலைச் சமூகம்.

(c-3834)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யா-பெலருஸ் இணைந்து மாபெரும் இராணுவப் பயிற்சி



(மொஸ்கோ)

ரஷ்யா மற்றும் பெலருஸ் நாடுகள் இணைந்து நடத்தும் 'Zapad-2025' என்ற மாபெரும் இராணுவப் பயிற்சி, ஐரோப்பிய நாடுகளுக்கான நேரடி எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

செப்ரெம்பர் 12 முதல் 16 வரை நடைபெறும் இப் பயிற்சியில் ஹைபர்சோனிக் ஏவுகணைகள், Su-34 போர் விமானங்கள், கனரக இராணுவ வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

மேலும், ரஷ்யா பெலருஸ் நிலப்பரப்பில் இடைத்தூர ஏவுகணைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக அதிகாரபூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா - பெலருஸ் கூட்டணி இந்த இராணுவப் பயிற்சி "பாதுகாப்பு நோக்கத்துக்காக மட்டுமே" எனத் தெரிவிக்கின்ற போதும் ஐரோப்பிய நாடுகள் இது குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக போலந்து, லிதுவேனியா போன்ற நாடுகள், எல்லைப் பாதுகாப்பு மற்றும் வான்வழி கண்காணிப்பு குறித்து கூடுதல் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

"இத்தகைய மிகப்பெரிய இராணுவப் பயிற்சிகள் பிராந்திய நிலைப்பாட்டை பாதிக்கக்கூடும்.

நிலைமை மேலும் பதற்றமடையும் அபாயம் உள்ளது," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நிபுணர்கள், இந்த பயிற்சிகள் சாதாரண இராணுவப் பயிற்சி அல்ல எனவும் தங்கள் சக்தியை வெளிப்படுத்தி, ஐரோப்பாவுக்கும் நேட்டோ கூட்டமைப்பிற்கும் எச்ச ரிக்கை விடுப்பதாக அமைந்துள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

முன்னதாக ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தி, அதற்கு பதிலாக கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஐரோப்பிய நாடுகளுக்கு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



## சொத்துக்களை அபகரி... ஐரோப்பிய நாடுகளை...

(மொஸ்கோ)

**"எங்கள் சொத்துக்களை அபகரிக்கும் எந்த ஐரோப்பிய நாட்டையும் பழி தீர்க்க தாமதிக்க மாட்டோம்" என ரஷ்யா தெரிவித்துள்ளது.**

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது.

இப்போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

சமீபத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ட்ரம்ப் நேரடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் புடின் சில நிபந்தனைகளை விதித்தார்.

பிறகு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேசினார்.

இதற்கிடையே உக்ரைனுக்கு பாதுகாப்பு உத்தரவாதங்களை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் வழங்க வேண்டும் என்று ஜெலன்ஸ்கி வலியுறுத்தினார்.

இதில் போர் நிறுத்தப்பட்ட தருணத்தில் பாதுகாப்பை வழங்க உதவுவதற்காக உக்ரைனின் 26 நட்பு நாடுகள் நிலம், கடல் அல்லது வான் வழியாக துருப்புக்களை அனுப்ப உறுதியளித்துள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தெரிவித்தார்.

இந்த நிலையில் வெளிநாட்டு இராணுவத்தால் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் வழங்கக் கூடாது என்று ரஷ்யா தெரிவித்தது.

இதனையடுத்து உக்ரைன் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக ரஷ்யா அறிவித்தது.

இந்நிலையில், உக்ரைனுக்கு...

## கடுமையான தாக்குதல்களால் பற்றி எரியும் காசா

### இஸ்ரேல் அமைச்சர் பகீர் தகவல்

(ஜெருசலேம்)

"காசா நகரம் முழுவதும் இரவு நேரத்தில் நடத்தப்பட்ட பலத்த தாக்குதல்களுக்குப் பிறகு பற்றி எரிகிறது" என இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் காட்ஸ் தெரிவித்தார்.

பாலஸ்தீனர்கள் வசிக்கும் காசாவில் இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என பல உலக நாடுகள் வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

காசா நகரத்தை இலக்காகக் கொண்டு இஸ்ரேல் ஒரு புதிய தாக்குதலைத் திட்டமிட்டு வரும் நிலையில், இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் காட்ஸின் கருத்துக்கள் வந்துள்ளன.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ கூறியதாவது, காசாவில் இஸ்ரேல் படையினர் தாக்குதலை தொடங்கி விட்டனர்.


எனவே ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு மிகக்குறுகிய கால அவகாசம் மட்டுமே உள்ளது என்று நாங்கள் நினைக்கிறோம்.

எங்களுக்கு இனி மாதங்கள் இல்லை, அநேகமாக நாட்கள் மற்றும் சில வாரங்கள் மட்டுமே இருக்கிறது இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரித்தால் பழி தீர்ப்போம் ளை எச்சரித்த ரஷ்யா!



உதவப் பல பில்லியன் டொலர் மதிப்புள்ள முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துக்களை பயன்படுத்துவதற்கான வழிகளை ஐரோப்பிய ஒன்றியம் தேடிவருவதாக செய்திகள் வெளியானது.

இந்த தகவலால் கடுப்பான ரஷ்யா, தங்கள் சொத்துக்களை அபகரிக்கும் எந்த ஐரோப்பிய நாட்டையும் பழி தீர்ப்போம் என்று மிரட்டல் விடுத்துள்ளது.

மேலும், தங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வது திருட்டுக்கு சமம் என ரஷ்யா காட்டமான கருத்தை தெரிவித்துள்ளது. (நி)

## ஆங்கில சொற்களுக்கு வடகொரியாவில் தடை!



(பியாங்யாங்)

உலக நாடுகளில் இருந்து துண்டிக்கப்பட்டு தன்னந்தனியாக தனக்கென தனித்த சட்டதிட்டங்களுடன் சர்வாதிகார ஆட்சியின் கீழ் உள்ள நாடு வடகொரியா. கடந்த நூற்றாண்டு தொட்டு ஒற்றைக் குடும்ப ஆட்சியின் கீழ் வடகொரியா இயங்கி வருகிறது. அதன் தற்போதைய ஜனாதிபதியாக கிட்டத்தட்ட மன்னராகவே கிம் ஜாங் உன் உள்ளார்.

வடகொரியாவின் மக்களின் வாழ்க்கை நிலை குறித்து வெளியுலகிற்கு இன்னும் புதிரானதாகவே இருந்து வருகிறது. கடுமையான கட்டுப்பாடுகளுடன் மக்கள் தங்கள் அன்றாட வாழ்நாளை கடத்தவே மிகவும் சிரமப்படுகின்றனர் என்பது தென்கொரியா மற்றும் பிற உலக நாடுகளின் கூற்று.

இந்நிலையில் Ham burger, Ice cream, Karaoke 2 ஆங்கில சொற்களை பயன்படுத்த வடகொரிய அரசு தடை விதித்துள்ளது.

சொற்கள் பயன்பாட்டில் மேற்கத்திய நாடுகள் மற்றும் தென் கொரியாவின் தாக்கத்தைத் தவிர்த்து, அதற்கு இணையான அரசு அங்கீகரித்த சொற்களை பயன்படுத்த சுற்றுலாத் தலங்களுக்கு வடகொரியா உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனையடுத்து சுற்றுலா தலங்களில் வேலை பார்க்கும் வழிகாட்டிகள் 3 மாத பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா வழிகாட்டிகள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் பேசும்போது கூட ஆங்கில வார்த்தைகளை பயன்படுத்தக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளது. (நி)

## வெனிசுலா போதைப்பொருள் கடத்தல் படகு மீது தாக்குதல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்குச் சென்று கொண்டிருந்த வெனிசுலா போதைப்பொருள் கடத்தல் குழுவொன்றின் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியது.

அண்மைய வாரங்களில் சந்தேகிக்கப்படும் போதைப் பொருள் படகு மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் திங்களன்று தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்ததாகவும், இச்சம்பவம் சர்வதேச கடல் பகுதியில் நடந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், படகில் போதைப்பொருள் இருந்ததாக ட்ரம்ப் கூறிய கருத்துக்கான எந்தவொரு ஆதாரத்தையும் வழங்கவில்லை.

போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகள் என்று அதிகாரிகள் கூறிய தெற்கு கரீபியனுக்கு அமெரிக்கா போர்க் கப்பல்களை அனுப்பிய பின்னர், இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்தன.

இதில் 11 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## இனி நெதன்யாகு கட்டாரை தாக்கப்போவதில்லை - ட்ரம்ப்



(வோஷிங்டன்)

கட்டார் மீதான தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தம்மிடம் ஏதும் தெரிவிக்கவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்டாரில் இடம்பெற்ற தாக்குதலுக்கு பொறுப்பு ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

கட்டாரின் டோஹாவில் ஹமாஸ் அமைப்பின் தலைவர்களை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் முற்றிலும் எங்களின் சுதந்திரமான நடவடிக்கை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இஸ்ரேல் தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில்,

இனி நெதன்யாகு கட்டாரை தாக்கப்போவது இல்லை எனவும் டோஹா நல்ல நட்புடன் இருந்து வருகிறது எனவும் பலருக்கு இது தெரியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், கட்டாரை தாக்குவதற்கு முன்னரே இதுபற்றி அமெரிக்காவிடம் நெதன்யாகு தெரிவித்து விட்டார் என்று சர்வதேச முன்னணி ஊடகங்கள் தரப்பில் செய்திகள் வெளியிடப்பட்டு இருந்த நிலையில், தாக்குதல் குறித்து இஸ்ரேல் எங்களிடம் தெரிவிக்கவில்லை எனவும் கட்டாரை நோக்கி தாக்குதலுக்காக ஏவப்பட்ட ஏவுகணைகள் வானில் பறந்து கொண்டிருந்த போதே தமக்குத் தகவல் வந்ததாகவும் அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்துங்கள்

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நவராத்திரி விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவிக்கையில்,

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள நவராத்திரி காலத்தில் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் முழுமையாக அத்தினத்தை கொண்டாடுவதற்கு அதிபர்கள், கல்வித் திணைக்கள பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

வருடந்தோறும் நடைபெறும் நவராத்தி விழா கல்விக்குரிய விழா மட்டுமன்றி, மாணவர்களின் கலை ஆளுமையை வெளிப்படுத்தும் காலமாகும்.

எந்தவொரு மாணவரும் தனது ஆளுமையை வெளிப்படுத்த வேண்டிய அரிய சந்தர்ப்பமான நாள். கடந்த சில ஆண்டுகளாக நவராத்திரி காலத்தில் பரீட்சைகளையும், விளையாட்டு போன்ற வேறு நிகழ்வுகளை திணைக்களங்கள் நடத்தியமையால் பல பாடசாலைகளில் கடந்த சில ஆண்டுகளாக நவராத்திரி விழாக்கள் வழமை போன்று சீராக இடம்பெறவில்லை.

நவராத்திரி விழாவானது சைவ தமிழர்களுக்கு முக்கியமான விழாக் காலமாகும். குறிப்பாக இளைய தலைமுறையினர் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றி தமது ஆளுமைகளை வெளிப்படுத்தும் காலமாகும்.

எனவே இக்காலத்தை பாடசாலைகளில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த விடயத்தை பாடசாலை அதிபர்கள், வலயப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சின் செயலர்கள் கவனத்தில் எடுத்து நவராத்திரி விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றார். (8)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து பெண் ஒருவர் உயிரிழப்பு, பலர் காயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கலானிகம மற்றும் கஹதுடுவ இடையே இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியுடன் பின்னால் வந்த வான் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த வானின் சாரதி, ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் ஹோமாகம வைத்தியசாலையிலும், மூன்று சிறுவர்கள் களுபோவில வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய பெண் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் ஹோமாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இந்திய உயர்ஸ்தானிகர் - நாமல் சந்திப்பு


(கொழும்பு)

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.



இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. (நி)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் வீதி அபிவிருத்தித் திணைக்கள கிளிநொச்சி பிரதம பொறியியலாளர் பணிமனையின் படவரைஞருமாகிய திருமதி.ந.பிரதீபா அவர்களின் அன்புத் தந்தை

**அமரர். கதிரவேலு குணபாலன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வடமாகாணம்

(5437)


# இன்று ஒரு தகவல் 445

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## பரிசுச் சீட்டு!

அதிர்ச்சியிலே இரண்டு வகை உண்டு. ஒன்று இன்ப அதிர்ச்சி இன்னொன்று துன்ப அதிர்ச்சி. இது இரண்டையும் ஏற்படுத்துவது எது என்றால் அது பரிசுச்சீட்டு அதாவது லாட்டரி சீட்டு திடீர் என்று ஒரு இலட்சம் விழுந்தால் அது இன்ப அதிர்ச்சிதானே! ஆயிரம் ரூபாய்க்கு சீட்டு வாங்கி அதிலே ஒரு சீட்டுக்குக்கூட பரிசு விழவில்லை என்றால் அது துன்ப அதிர்ச்சி! அதெல்லாம் இருக்கட்டும்.

இந்த லாட்டரி சீட்டுத்திட்டம் எப்போது எங்கே ஆரம்பமாகியது தெரியுமா?

பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இது ஆரம்பமாகி விட்டுதாம். முதன் முறையாக ரோமானியர்கள் தான் இதை ஆரம்பித்தார்களாம். அப்போதெல்லாம் பரிசு என்ன தெரியுமா? முதல் பரிசு ஒரு கப்பல்

இரண்டாவது பரிசு ஒரு வீடு. மூன்றாவது பரிசு வீட்டு வேலைகள் செய்வதற்கு ஒரு அடிமை ஆள்.

நாலாவது பரிசு ஆடு, மாடு.

ஐந்தாவது பரிசு கட்டை வண்டி இப்படியெல்லாம்தான் அப்போது பரிசுகள் கொடுத்தார்களாம். இப்போதெல்லாம் கப்பலை முதல் பரிசாகக் கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

பணம் கொடுத்து லாட்டரி டிக்கட்டுகள் வாங்குகின்ற முறை இங்கிலாந்திலே தான் அறிமுகமானது. அதுவும் 1612லே!

பரிசையும் பணமாகவே கொடுத்தார்கள்.

அதன் பின் 1894லே அமெரிக்காவிலே இந்தப் பழக்கம் ஆரம்பமானது. ஜேர்மனி, பிரான்ஸ் இங்கிலாந்து அரசாங்கம் லாட்டரி வருவாய் மூலமாகத்தான் கட்டி முடிந்தது.

இத்தாலி அரசாங்கம் லாட்டரி மூலம் கிடைத்த வருவாயை வைத்து அரசாங்கத்தையே நடத்தியதாம்.

புகழ்பெற்ற பிரிட்டிஸ் அருங்காட்சியகம் இருக்கிறது இல்லையா? இங்கிலாந்து அரசாங்கம் அதை லாட்டரி வருவாய் மூலமாத்தான் கட்டி முடித்ததாம்!"

அமெரிக்காவிலே ஹார்வார்டு பல்கலைக்கழகம் இருக்கிறது கொலம்பியா பல்கலைக்கழகம் இருக்கிறது அதெல்லாம் ஆரம்பிப்பதற்கும், இன்றுவரைக்கும் சிறப்பாக இயங்கி வருவதற்கும் லாட்டரி வருவாய் தான் ரொம்பவும் உதவியாக இருந்தது!

ரஷ்யாகூட இரண்டாவது உலகப்போர் நடந்த சமயத்திலேகூட லாட்டரி இயங்கி இருக்கிறது!

சரி இந்தியாவுக்குள்ளே இந்த லாட்டரி சீட்டு எப்படி நுழைந்தது?

1850லே இங்கே ஆங்கிலேய கவர்னராக இருந்தவர் சர் சார்லஸ் எட்வெர்ட் டிரிவேலியன்! அவர் தான் முதன் தடவையாக இந்தியாவிலே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

சென்னையிலே உள்ள ரிப்பன் மாளிகை, மூர்மார்க்கெட் மியூசியம் இது மாதிரியான கட்டடங்களையெல்லாம் லாட்டரி வருமானத்தின் மூலமாகத்தான் கட்டி முடித்தார்களாம்!

சுதந்திர இந்தியாவிலே முதல் தடவையாக லாட்டரி சீட்டு அறிமுகமான மாநிலம் ஒரிசா, ஒரிசா அரசாங்கம் தான் அதை ஆரம்பித்தது. 1955இற்குள்ளே அதை நிறுத்திவிட்டார்கள் அதன்பின் ஒரு 13 வருடத்திற்கு இந்தியாவிலே லாட்டரி சீட்டே கிடையாது.

மறுபடியும் என்ன ஆனது என்றால்

1968இலே முதலிலே கேரளாவிலே ஆரம்பம். அதன்பின் தமிழ்நாட்டிலே இது வந்தது.

இப்போதெல்லாம் இது எல்லாருக்கும் அறிமுகமான ஒரு விடயம் எங்கே பார்த்தாலும் லாட்டரி மயமாக இருக்கிறது. ஒரு மனிதன் ரொம்பவும் கவலையோடு உட்கார்த்திருந்தான்.

கடவுள் அவன் முன்னாடி தோன்றினார்!

"ஏன் இப்படி கவலையோடு உட்கார்ந்திருக்கிறாய். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன்!" என்றார்.

"வேறு ஒன்றும், வேண்டாம். எனக்கு லாட்டரி சீட்டிலே ஒரு இலட்சம் பரிசு விழுகின்ற மாதிரி செய்யுங்கள் அதுபோதும் அதை வைத்துக்கொண்டு பிழைத்துக் கொள்வேன்" என்றான்.

"சரி... அப்படியே நடக்கும். வரம் கொடுத்துவிட்டேன்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார்.

கொஞ்ச நாள்கழித்து மறுபடியும் ஒருநாள் கடவுள் இங்கே வந்தார். அதே ஆசாமி மறுபடியும் தலையிலே கையை வைத்துக்கொண்டு கவலையோடு உட்கார்ந்திருந்தான்.

கடவுளைப் பார்த்ததும் கோபமாக கத்தினான்.

"என்னை இப்படி ஏமாத்திவிட்டாயே. லாட்டரியிலே ஒரு இலட்சம் விழும் என்று வரம் கொடுத்தாயே எனக்கு விழவே இல்லையே!" என்றான். கடவுள் நிதானமாக சொன்னார்.

"தவறு என் மேலே இல்லை. உன் பெயரிலேதான் ஒரு இலட்சம் உனக்கு விழுவதற்கான அதிர்ஷ்டத்தை நான் கொடுத்து விட்டேன்! ஆனால்நீ ஒரு ரூபா கொடுத்து சீட்டே வாங்கவில்லையே!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமற்ற மனைகளில் நிலைக்குத்தான விவசாயம்: முயற்சி திருவினையாக்கும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

குடித்தொகை அதிகரிக்கும் போது அவற்றுக்கான வாழ்விடங்களின் தேவையும் அதிகரித்த வண்ணமே காணப்படும். சாலையோரம் சிறந்த மண்உள்ள விளைநிலங்களெல்லாம் தற்போது வாழ்விடங்களாகவும் தொழிற்றுறைக்கான கட்டடங்களாகவும் மாறிக்கொண்டேயிருக்கின்றன.

இது ஒரு வகையில் விவசாயத்திலீடுபடுபவர்கள் பிறதொழில்களுக்கு நகர்ந்து விடுவதாலும் வசதிவாய்ப்புக்களை அதிகரிக்க நல்ல விளை நிலங்கள் மனைகளாக தொழில் நிறுவனங்களின் கட்டடங்களாக மாற்றமடைகின்றன. இது ஒரு வகையில் விவசாய உற்பத்திக்கான நிலங்களின் விழுக்காட்டினை ஏற்படுத்துவதோடு அபிவிருத்தி என்னும் போர்வையில் விவசாய உற்பத்தியின் சாவு மணியாகவும் பார்க்கலாம்.

குறிப்பாக நகரப்பகுதிகளில் உயிர்வேலிகளில் (Life fense) பல்பயன்தரும் மரங்களையும் மருத்துவ குணமுடைய தாவரங்களையும் வளர்த்திருந்த நிலைமை மாறி அநேகமான உயிர்வேலிகள் தற்போது சீமெந்தினாலான தடுப்புச் சுவர்களாக மாறிவிட்டன.

உயிர்வேலிகளில் அவரவர் மனைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கான இலையுணவுகளை வழங்குவதற்காக பூவரசு, கிளிறிசிடியா, சீமைக்கிளுவை மற்றும் முட்கிளுவை என்பனவற்றுடன் ஆடாதோடை, பாவட்டை, காட்டுப்பருத்தி, நொச்சி, கருநொச்சி, ஆமணக்கு மற்றும் வேம்பு என்பன வளர்க்கப்பட்டன. இவை வளர்க்கப்பட்டிருக்கின்ற உயிர்வேலிகளை இன்னமும் நாம் காண முடிகின்றது.

இதில் உள்ள சிறப்பம்சம் என்னவெனில் பாரம்பரிய முறையில் இயற்கையாக மகவு பெற்ற தாய்மார்களின் உடல் வலியை போக்குவதற்காக ஐந்திலைகள் கலந்த வெந்நீரில் குளிப்பாட்டுவதற்காகவும் இவ்வாறான மருத்துவ தாவர இலைகளை பெறுவதற்காகவும் குறிப்பிட்ட தாவரங்கள் வளர்க்கப்பட்டன. வெந்நீர் வார்ப்புக்காக ஐந்திலைகளான வேம்பு, பருத்தி, நொச்சி, ஆடாதோடை மற்றும் ஆமணக்கு ஆகியவற்றின் இலைகள் ஆண்டாண்டு காலமாக மூத்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுக்குடும்பமாக இருந்த போது மனைகளிலுள்ள மூத்த பெரியவர்கள் இவ்வாறான பாரம்பரிய நடைமுறையை அவசியம் கடைப்பிடித்து வந்தமையும் அதன் காரணமாக முந்தைய காலங்களில் தாய்மார்கள் சுகதேகிகளாக இருந்ததனால் ஒரு குடும்பத்தில் பத்து பிள்ளைகள் பிறந்ததும் அவதானிக்க முடிகின்றது. பிள்ளை பிறந்த மனைகளில் கணவன்மார்கள் இவ்வாறான ஐந்திலைகளை ஊரூராக தேடியலைந்து பறித்து வந்து வெந்நீர் குளிப்பாட்டுவதும் நடைமுறையிலிருந்தது. ஆனால் தற்போது இந்த பாரம்பரியமான மருத்துவ நடைமுறை அருகிவருவதும் கூட்டுக்குடும்ப நடைமுறை சிதைவுற்று தனிக்குடும்பங்களாகி பலர் இவ்வாறான பாரம்பரிய நடைமுறைகளை கைவிட்டுவிட்டநிலையில் இறுதியில் ஓரிரு பிள்ளைகளுடன் குடும்பங்களும் சுருங்கி தாய்மார்களின் சுகாதாரமும் கேள்விக்குறியாகிவிட்டது.

வெளிநாடுகளில் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி பயன்படுத்துவதும் நீர் விவசாயம் செய்வதும் சவூதி அரேபியாவில் மணல் தரையை பசளையதிகமான களிநிலமாக மாற்றி விவசாயஞ் செய்யும் தொழில்நுட்பங்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. நிலமற்ற அல்லது நிலம் சிறியளவிலிருந்தாலும் அதில் நிறைந்த விவசாயஞ் செய்யும் பொறிமுறைகள் உருக்கொண்டுள்ளன.

கொள்கலனில் பயிர்ச்செய்கை என்பது அதிலொன்று. குறிப்பாக இஞ்சி, மஞ்சள், பிள்ளைக் கற்றாளை மற்றும் மரக்கறிப்பயிர்கள் என பலவகைப்பயிர்கள் உற்பத்தியாகின்றன. எந்த வகையான கொள்கலனையும் இதற்கு பயன்படுத்தலாம் என்றாலும் நீர் வடிந்தோடக்கூடிய வகையில் கொள்கலன்களில் துளைகள் இட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு கொள்கலன்களில் செய்யும் பயிர்ச்செய்கைக்கு வேண்டியளவு சேதனப்பசளைகளும் இடுதல் அவசியம் அதனுடன் தேவையானளவு நீரூற்றுவதும் மிகவும் அவசியமானதொன்றாகும். நீர் வடியாமல் விட்டாலோ கொள்கலனிலுள்ள மண் அல்லது உக்கல் காய்ந்து போனாலோ தாவரம் வாடி இறந்துவிடும். இதற்காக தேவையானளவு நீரை பாய்ச்சுவதற்காக தானியங்கி நீர் விடும் பொறிமுறை (Automated water supplying mechanism) பயன்படுத்தப்படுகின்றது. கொள்கலனிலுள் ஈரப்பதனை கணக்கிட்டு தானியங்கி மூலம் தேவையானளவு நீரை பாய்ச்சுவர்.

இதேவேளையில் மண்ணின்றிய பயிர்ச்செய்கையும் (Soilless culture) மனைகளில் அது அமைந்துள்ள காணியின் நாற்புறமும் பயன்படுத்தப்படுகின்றது. நிலைக்குத்தான விவசாயத்தில் மண்ணின்றிய பயிர்ச்செய்கை மூலம் (Hydrophonic) தேவையானளவு ஊட்டச்சத்தை நீருடகத்துடன் வழங்கி பல பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. உயிர் வேலிகளை மாற்றி சீமெந்து மதில்களைக் கட்டி அதனையும் பலஅடுக்குகளில் கட்டி பாதுகாப்பு என உணர்ந்தாலும் அந்த மதில்களையும் நிலைக்குத்தான பயிர் விளைவித்தலுக்கு பயன்படுத்த முடியும். மேற்குறிப்பிட்ட பொறிமுறைகளில் மண்ணின்றிய விவசாய பொறிமுறையையும் கொள்கலன்களில் வளர்க்கும் பொறிமுறையையும் இணைத்து மதில்களை ஆதாரமாக வைத்து பல பயிர்களை விளைவித்துக் கொள்ளலாம். இதற்கு தேவையான ஊட்டச்சத்தினை எமது மனைகளில் தினமும் உருவாகும் சமையலறை சேதன கழிவுகளைப் பயன்படுத்தி மண்புழு மற்றும் கறுப்பு படை இலையானையும் வளர்த்து அவற்றின் கழிவு நீரை அடிப்படையாக வைத்து பயிர்களை விளைவிக்க முடியும். சேதனக் கழிவுகளை வெறுமனே தெருவில் வீசி யெறியாமல் அவற்றை தரமான ஊட்டச்சத்து நிறைந்த பசளையாக மாற்றிவிட்டால் நிலைக்குத்தான பயிர்விளைவிப்பதற்கான ஊட்டச்சத்து கிடைத்து விடும்.

இந்த முறையில் இலைக்கறி வகைகள், நுண்ணியபச்சை தாவரங்கள், இன்னும் மரக்கறி பயிர்கள் என்பனவற்றை வளர்த்து பயன்படுத்திக் கொள்ளலாம். விருப்பமுடையவர்களுக்கு அழகுத் தாவரங்களைக் கூட இம்முறையில் வளர்த்துக் கொள்ளலாம். இயந்திர வேகத்தில் இயங்கும் நாம் எமது மனதுக்கு இரம்மியமான சூழலை ஏற்படுத்தி அதில் அமைதி கொள்வதும் எமது உளம்சார்ந்த ஆற்றுதலுக்கு அவசியமானது ஆகும்.

இயற்கையான முறையில் நஞ்சற்ற பயிர்களை வளர்க்கும் பொறிமுறைக்குள் எம்மை ஈடுபடுத்திக் கொள்வது என்றும் எமக்கான சுகாதாரத்தை நாமே பேணிக்கொள்ள வாய்ப்பாக அமைந்துவிடும். எமது மனைகளில் தினமும் வெளிவரும் சேதனக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதன் மூலம் எமக்கு தேவையான உயிர்ப்பசளைகளை நாமே உருவாக்குவதோடு நாமே வளர்த்து உணவாக்கும் பொறிமுறைக்கும் எம்மை ஈடுபடுத்திக் கொண்டால் சுத்தமாக வீட்டையும் குடும்ப சுகாதாரத்தையும் நாமே எதுவித செலவுமின்றி பெறுக்கொள்ளலாம். எமக்கான வாய்ப்புக்கள் பல இருக்கும் போது நாம் அவற்றை சிறிதளவேனும் முயற்சி செய்து பார்க்கலாமே.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
(படம்- மகாலிங்கம்)

# Invitation for Bids (IFB)

## Democratic Socialist Republic of Sri lanka
## Nallur Pradeshiya Sabha, Kokuvil.
## Northern Province

### Bidding Documents for Procurement of Coloured waste Bins, Compost Bins& Glass Cupboards

1. **The Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Nallur Pradeshiya Sabha, Kokuvil,** Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Coloured waste Bins, Compost Bins & Glass Cupboards as in table below **and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**

| No | Bid No | Description of Goods | Employer's Estimated Cost (Rs. Mn) | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(10)/Coloured Waste Bin/2025 | Procurement of Coloured Waste Bins. | 1.2 | 30 days | 03.12.2025 | 20,000.00 | 31.12.2025 |
| 02 | NP/14/41(10)/Compost Bin/2025 | Procurement of Compost Bins. | 3.2 | 30 days | 03.12.2025 | 50,000.00 | 31.12.2025 |
| 03 | NP/14/41(10)/Library Cupboard/2025 | Procurement of Library Cupboard | 02 | 30 days | 03.12.2025 | 30,000.00 | 31.12.2025 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from **17th September 2025 to 30th September 2025** from **Chairman, Nallur Pradeshiya Sabha, Kokuvil** and inspect the bidding documents at the same place on the above time.
   TP: **-021 222 2700**, Email npsnallur@gmail.com
4. Qualification requirements are include possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address **Chairm an, Nallur Pradeshiya Sabha-Kokuvil from 17th September 2025 until 30th September2025 from 09.00 hrs to 15.00 hrs** on public working days and upon payment of non-refundable fee of Rs 2,000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
6. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the **"Bid number"** on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Divisional Procurement Committee, Nallur Pradeshiya Sabha, Kokuvil** on or before **01st October 2025 at 11.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
7. The Pre-Bid Meeting will be held at **Nallur Pradeshiya Sabha-Kokuvil on 24th September 2025** at 14.00 hrs, Interested Bidders May Participate in this Meeting their own expenses.
8. The Bid shall be valid up to 63 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above.

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Nallur Pradeshiya Sabha,**
**Kokuvil.**

**17.09.2025**

(C-3897)

# திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால், வடக்கு மாகாண மாகாண விளையாட்டு திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

முழுமையான அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்பங்கள் என்பன www.np.gov.lk → Exam and Recruitment → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென்பதுடன் தகைமையுடையவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியான 2025.10.03 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (8)

# ஜப்பான் யமஹா குழுவினர் பருத்தித்துறைக்கு விஜயம்

(கரணவாய்)

ஜப்பான் அதிகாரிகள் அடங்கிய யமஹா நிறுவன குழுவினர் பருத்தித்துறை நகர சபைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது வடமராட்சி பகுதிக்கு வருகைதந்த இக் குழுவானது கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை நகர சபைக்கு நேரில் சென்று நகர பிதாவுடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த கலந்துரையாடல், பிரதேச மக்கள் குறிப்பாக மீனவ சமூகத்தினர் பயன்பெறும் வகையிலான செயற்றிட்டம் ஒன்றிற்கான திட்ட வரைபினை தரும்பட்சத்தில் அதனை தமது நிதி அனுசரணையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக இக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக பொருத்தமான திட்ட வரைபு தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இச்சந்திப்பின் போது பருத்தித்துறை நகரை மீளவும் கட்டியெழுப்பும் செயற்பாட்டின் அடிப்படையில் யமஹா நிறுவனத்தின் கடல் தொழில் உபகரணங்கள் தொடர்பான நிலையம் ஒன்றை பருத்தித்துறையில் அமைப்பது தொடர்பில் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் நகர பிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தெரிவித்துள்ளார். (8-60)

## சுமார் 60 வருடங்களாக

# புனரமைக்கப்படாமல் இருந்த குஞ்சர்துரவுகுளம் தூர் வாரப்பட்டது

(சாவகச்சேரி)

சுமார் 60 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்று இருந்த சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் குஞ்சர்துரவு குளம் நகராட்சி மன்றத்தினால் ஒரே நாளில் தூர்வாரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீசாலை கிழக்கு வட்டாரத்தில் நகராட்சி மன்றத்தின் நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போதே சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தூர்வாரப்படாமல் நகரசபையின் கண்காணிப்பில் இருந்து விடுபட்ட பழமைவாய்ந்த குஞ்சர்துரவு குளம் உபதவிசாளர் ஞா.கிஷோர், உறுப்பினர்களான வ.பிரகாஷ், மு.கோகுல்ராஜ் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் ஒரே நாளில் தூர்வாரப்பட்டுள்ளது.

கிராமத்தின் அடையாளமான குஞ்சர்துரவு குளத்தினை தூர்வாரி பாதுகாக்குமாறு கிராம மக்கள் நீண்டகாலமாக நகரசபையிடம் கோரிக்கை முன்வைத்தும் பயனற்ற நிலையில் வட்டார உறுப்பினர் பிரகாஷ் -உபதவிசாளர் கிஷோரோடு இணைந்து முன்னெடுத்த முயற்சியின் பயனாக குஞ்சர்துரவு குளம் தூர்வாரப்பட்டுள்ளது.

நகரசபையின் கடந்த மாதாந்த அமர்வில் உபதவிசாளரினால் முன்மொழியப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள், கிணறுகள், கேணிகள், குளங்கள் என்பவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற ஏகமனதான பிரேரணைக்கு அமையவே உள்ளூராட்சி வாரத்தின் முதன்நாளில் குஞ்சர்துரவு குளம் தூர்வாரும் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்பவரே தன்னை முழுமையான சக்திசாலியாய் மாற்றிக் கொள்கிறார். - அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லாவற்றையும் எதிர்ப்பது எந்தவகையில் நியாயமாகும்

எங்கள் தமிழ் அரசியல் தோல்வி கண்டு விட்டது என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும். இவ்வாறு தோல்வி காண்பதற்குக் காரணம் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாழ்விலும் அரசியல் என்ற தவறான கணிப்பாகும்.

ஆம், அரசியல் தீர்வு என்பது எத்துணை அவசியமோ அதுபோல மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதும் முக்கியமாகும்.

அதாவது, அம்மா பசிக்கிறது என அழுகின்ற தன் பிள்ளைக்கு ஏதேனும் ஆகாரத்தை பெற்றுக் கொடுப்பதைத் தவிர அந்தத் தாய்க்கு வேறுஎதுவும் முதன்மைக்குரியதாக இருக்க மாட்டாது.

ஆகையால்தான் உரிமைப் போராட்டங்களை நடத்தியவர்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான திட்டங்களை சமநேரத்தில் முன்னெடுத்துச் சென்றனர்.

அதேநேரம் அனைவரும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தங்களின் சீவனோபாயத்தை நடத்தக்கூடியதான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஆனால் எங்கள் உரிமைப் போராட்டம் மௌனித்த பின்னரான தமிழ் அரசியல் என்பது, தனித்து தமிழ் மக்களின் அரசியலைக் கதைப்பதாகவும் அரசியல் விமர்சனங்களை முன்வைப்பதாகவும் அரசாங்கம் எதைச் செய்தாலும் அதனை எதிர்ப்பதே தங்களின் அரசியலுக்கான அடிக்கட்டு உரம் எனவும் கருதிக் காரியங்கள் ஆற்றப்பட்டன.

இதன் காரணமாக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் அவர்களின் பொருளாதார - சமூக - கல்வி விடயங்கள் கவனிக்கப்படாமல் கைவிடப்பட்டன.

அதேநேரம் எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற ஒரு கலாசாரம்; சுயநலமும் கௌரவத் தேவையும் கொண்ட தரப்புகளால் உருவாக்கப்பட்டன.

இந்தத் தரப்பினரில் ஒரு பகுதியினர் கையூட்டு வழங்கக்கூடியவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுகின்ற பணியைச் செய்பவர்களாகவும் காணப்பட்டனர்.

இவ்வாறான ஒற்றையடிப் பாதைப் பயணம் எங்கள் அரசியலைத் தோல்வியடையச் செய்தது.

ஆம், ஓர் இனத்தின் எழுச்சியும் வாழ்வும் என்பது அவர்களது அரசியல் உரிமையுடன் மட்டுமன்றி சமூக, பொருளாதார, கல்வி, கலாசாரப் பண்பாட்டுக் கட்டமைப்புகளிலும் தங்கியுள்ளது.

ஆயினும் நம் அரசியல் தரப்புகள் எமது இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பற்றியோ, முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர்களின் குடும்ப நிலைகள் பற்றியோ அன்றி அடிப்படை வசதிகளற்ற கிராமங்களில் உள்ள மாணவர்களின் கல்வி பற்றியோ, மருத்துவ வசதிகள் மற்றும் தொழில் முயற்சிகள் பற்றியோ அன்றி ஏழை மக்களின் நாளாந்த சீவனோபாயம் பற்றியோ இம்மியும் சிந்திக்காமல் - அரசியலையும் தந்திரோபாயத்துடன் கையாளாமல் எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற நியாயமற்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக எங்கள் அரசியல் தோல்வியைத் தழுவி வருகிறது என்பது தான் நிதர்சனமான உண்மை.

## வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையரும் வாக்களிக்கும் வகையில் சட்டத்திருத்தம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கும் வகையில், தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்ய அல்லது புதிய சட்டத்தை உருவாக்க ஒரு குழுவை நியமிக்க பொதுநிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அரசியலமைப்பின் 3ஆவது மற்றும் 4ஆவது உறுப்புரைகளின்படி மக்கள் இறைமை அதிகாரம் தேர்தல் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆனால் தற்போதைய தேர்தல் சட்டங்களின்படி, இலங்கையில் வசிக்கும் மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்துள்ள குடிமக்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை உள்ளது. ஆகவே இந்தச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக தற்போதுள்ள சட்டத்தை திருத்தம் செய்ய அல்லது புதிய சட்டத்தைத் தயாரிப்பதற்கான விடயங்களை ஆராய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்படும்.

இந்தக் குழுவில் தேர்தல்கள் ஆணைக்குழு, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, பொதுநிர்வாக, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் இடம்பெறுவர்.

இந்தியா, வங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற பல ஆசிய நாடுகள், ஏற்கனவே வெளிநாடுகளில் வாழும் தங்கள் குடிமக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க சட்டங்களை வகுத்துள்ளன என்றார். (ம-7)

## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் இருபாலைப் பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

அப் பகுதியிலுள்ள வீடொன்றில் துர்நாற்றம் வீசுவதை அவதானித்த அயலவர்கள் குறித்த வீட்டிற்குச் சென்றபோது வீட்டின் முன்பகுதியில் குடும்பஸ்தர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து அயலவர்களால் கோப்பாய் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

மரணம்தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்த யாழ்.மாவட்டத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

இதனையடுத்து கோப்பாய் பொலிஸார் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் ஆரம்பகட்ட விசாரணைகளையும் முன்னெடுத்திருந்தனர்.(ம-7,104)

## கடலில் நிர்க்கதியாக நின்ற அறுவரை மீட்ட கடற்படை

(மன்னார்)

தலைமன்னார்மணல் திட்டைச் சுற்றிய கடற்பரப்பில் ஆட்கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஆறு இலங்கையர்களைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமத்திய கடற்படை கட்டளைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது தலைமன்னாரின் ஏழாம் மணல் திட்டில் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த ஆறு பேரும் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 8 முதல் 56 வயதுக்குட்பட்ட வவுனியா, மடு மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கடற்படையினரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ள நிலையில், மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

## யாழ்.மாவட்ட செயலகத்தில் விசேட தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்டத் தொழில் நிலையமானது தம்மிடம் பதிவு செய்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் மற்றும் ஏனைய தராதரங்களையுடைய தொழில் தேடுவோருக்குத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 22ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் விசேட மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள், கணனித் துறை, ஹோட்டல் முகாமைத்துவம், கணக்கியல், ஆடைத்தொழில், காப்புறுதித்துறை, நிர்மாணத்துறை, சிறுதொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள் அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தனியார் மருத்துவத்துறை உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தமக்கான ஆளணியினரைத் தெரிவு செய்யவுள்ளனர்.

ஆகவே தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் இந்நிகழ்வு தொடர்பான மேலதிக தகவல்களை யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட தொழில் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 9359 என்ற அலுவலகத் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொண்டு தொழில்வாய்ப்புத் தொடர்பான தகவல்களை இலவசமாகப்பெற்றுப் பயனடைய முடியும் என யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ம-7)

## அரச நிதி மோசடி வழக்கில் கெஹலியவுக்குப் பிணை

(கொழும்பு)


தரமற்ற ஈமோகுளோபின் கொள்வனவின் ஊடாக அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பிரதிவாதிகளை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று 16 செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

பிரதிவாதிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டதுடன் பிரதிவாதிகளைப் பிணையில் விடுவிப்பதைச் சட்டமா அதிபர் எதிர்ப்பதாகப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன் பின்னர் பிரதிவாதிகளைப் பிணையில் விடுவிக்கக் கோரி அவர்களின் சட்டத்தரணிகள் நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இரு தரப்பினரும்முன் வைத்த வாதங்களைப் பரிசீலித்த நீதிபதிகள் மகேஷ் வீரமன், பிரதீப் அபேரத்ன மற்றும் அமலி ரணவீர ஆகியோரை உள்ளடக்கிய மேல் நீதிமன்ற அமர்வு பிணை கோரிக்கையை ஏற்று பிரதிவாதிகள் வெளிநாடு செல்வதைத் தடை விதித்து ஒவ்வொரு பிரதிவாதியும் தலா 05 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 05 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க உத்தரவிட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

## பகுதி VI

02

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

மீண்டும் முன்னர் போலவே தேயிலையைப் புது நிலங்களில் பயிரிடுவதற்கான போட்டி அதிகரித்தது.

**கூலியாட்களை இந்தியாவில் திரட்டல்**

1878 இல் 275,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட கோப்பி 1880 தொடக்கம் வீழ்ச்சியடையத் தொடங்கி, 1889 இல் 50,000 ஏக்கர் நிலத்தில் மாத்திரம் செய்கை பண்ணப்பட்டது. மறுபுறம் கோப்பியின் இவ் வீழ்ச்சிக்குப் பதிலாக தேயிலைத் தொழில் துரிதமாக விருத்தியடைந்தது. 1873 இல் தேயிலை பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பளவு 250 ஏக்கர் ஆகும். இது 1884 இல் 70,000 ஏக்கராகவும், 1890 இல் 220,000 ஏக்கராகவும், 1904 இல் 388, 753 ஏக்கராகவும் அதிகரித்தது.

இவ்விதமாக பயிர்ச்செய்கை, கோப்பியிலிருந்து தேயிலைக்கு மாறிய பொழுது, தோட்டத் துரைமாருக்குத் தேவைப்பட்ட கூலியாளர் தொகையிலும் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. கோப்பிச் செய்கைக்குத் தேவைப்பட்ட கூலியாட்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. ஆனால் தேயிலை, இறப்பர்த் தோட்டங்களுக்கு வருடம் முழுவதிலும் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்யக்கூடிய பெருமளவு கூலியாட்கள் தேவைப்பட்டதுமன்றி, அவர்களை, நிரந்தர வாசிகளாகத் தோட்டங்களில் வசிக்க வசதி செய்து கொடுக்கவும் வேண்டியதாயிற்று.

பின்வரும் புள்ளி விபரங்கள் கூலியாட்களின் அதிகரிப்பைக் காட்டுகிறது.

| ஆண்டு | தோட்டங்களின் மொத்தச் சனத்தொகை | அதிகரிப்பு | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|
| 1871 | 123,654 | | |
| 1881 | 206,495 | 82,841 | 67% |
| 1891 | 262,262 | 55,767 | 27% |
| 1901 | 441, 601 | 179,339 | 68% |
| 1911 | 513,467 | 71,866 | 63% |
| 1921 | 568,850 | 55, 383 | 11% |
| 1931 | 790, 376 | 221,526 | 39% |

தேயிலைத் தோட்டங்கள் பெருகவே, தோட்டத் தொழிலாளர் எண்ணிக்கையும் பெருகியதை இவ்விபரங்களிலிருந்து காணலாம். இதற்குத் துணை புரிந்த ஒரு காரணம், பெண்களும், பிள்ளைகளும், குறைந்த சம்பளங்களில், கொழுந்தெடுத்தல், தரம் பிரித்தல் போன்ற வேலைகளுக்கு அமர்த்தப்பட்டமையாகும்.

தோட்டத் தொழிலாளர் பிரச்சினையில் அரசாங்கம் நீண்ட காலமாகத் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. கூலியாட்களை இந்தியாவில் திரட்டுதல், அவர்களைத் தோட்டங்களுக்கு அனுப்புதல், அவர்களின் வேலை நிலைகள், சம்பளங்கள் எனும் பிரச்சினைகளின் தீர்வு, துரைமார்களின் கைகளில் விடப்பட்டன.

ஆரம்பந்தொட்டு, இத்தொழிலாளர் பிரச்சினையில் ஈடுபட அரசாங்கம் மறுத்தது. எனினும் இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசாங்கம், கூலியாட்களுக்குச் சில உதவிகளைச் செய்ய முன்வந்தது.

ஆள்பதி உவாட், கூலியாட்களைக் கொண்டு வருவதற்கு மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் வள்ளப் போக்குவரத்தை ஏற்படுத்தினார், ஆள்பதி கிறகரி மன்னாரிலிருந்து மதவாச்சி வரை ஒரு தெருப்பாதையை அமைத்தார்.

அரசாங்கம் தோட்ட முதலாளிகளுக்குச் சாதகமாக, தொழிலாளரிடமிருந்து, முறையான வேலை வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1865-ஆம் ஆண்டின் பதினோராம் இலக்க சேவை ஒப்பந்தக் கட்டளைச் சட்டத்தை (Service Contracts Ordinance) இயற்றியது.

**வைத்திய தேவைகள் கட்டளை சட்டம்**

அடுத்துத் தோட்டத் துரைமார் தம் தோட்டங்களிலுள்ள கூலியாட்களுக்கு முறையான வைத்திய வசதிகளைப் பெற்றுத் தரவேண்டுமென்ற நோக்குடன் 1872 இல், வைத்திய தேவைகள் கட்டளையை (Medical Wants Ordinance) இயற்றியது.

இச்சட்டம், அரசாங்கம், தோட்டப் பிரதேசங்களில், வைத்தியசாலைகளையமைத்து, அவற்றை நடாத்துவதற்கான செலவுகளைத் துரைமாரிடம் அறவிடவும், கூலியாட்களின் வசிப்பிடங்களை, அரசாங்க வைத்திய அதிகாரிகளைக் கொண்டு மேற்பார்வை செய்யவும் வழிவகை செய்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் அரசாங்கம், கூலியாட்கள் பிரச்சினையில் கூடுதலான அக்கறையும் சிரத்தையும் எடுக்கத் தொடங்கியது. இந்தியக் கூலியாட்கள், அம்மை, பேதி போன்ற தொற்று நோய்களைக் கொண்டு வந்து பரப்பாமல் தடை செய்ய அரசாங்கம் அவர்களின் தங்குதலுக்கென மண்டபத்தில் ஒரு முகாமை ஏற்படுத்திற்று.

**தொழிலாளரைத் திரட்டுவதற்கு துண்டு முறை**

அடுத்து, அரசாங்கம் தென்னிந்தியத் தொழிலாளரைத் திரட்டும் பொறுப்பைத் தானே ஏற்று நடாத்த முற்பட்டது. கண்காணி முறையின் கீழ், கூலியாட்கள் அடிமைகள் போல் நடாத்தப்பட்ட இன்னல்களைப் போக்குவதற்காக இலங்கை அரசாங்கம், 1902 இல் "துண்டு" முறையை ஏற்படுத்தியது.

தோட்டங்களினதும், அவையிருந்த மாவட்டங்களினதும் பெயர்கள் பதியப்பட்ட துண்டுகளை அரசாங்கம் தோட்டங்களுக்கு விற்றது. கண்காணிகள் இச்சீட்டுக்களைக் கொண்டு இந்தியா சென்றனர். இந்தியாவில் சீட்டுக்களைப் பெற்ற தொழிலாளர், இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பானர்கள்.

அவர்கள் தம் தோட்டங்களைப் போயடையும் வரையுள்ள சகல செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. அச்செலவுகளைத் தோட்ட முதலாளிகள் தொழிலாளரிடம் அறவிட்டு அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தனர்.

1904 இல், கரையோரத் திரட்டு நிலையம் (Coast Agency) திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது. பற்றூர் (Battur), மாயவரம், திண்டிக்கல், மதுரை, திருநெல்வேலி எனும் ஐந்து இடங்களில் உதவி நிலையங்கள் நிறுவப்பட்டன.

இலங்கை அரசாங்கத்தின் தொழில் ஆணையாளர்கள், தொழிலாளரைத் திரட்டி இலங்கைக்கு அனுப்பினர். 1915 இல் இலங்கையும் இந்தியாவும் புகையிரத வீதியினால் இணைக்கப்பட்டதனாலும், மண்டபத்தில் முகாம் அமைக்கப்பட்டதனாலும் போக்குவரத்து மிகவும் சுலபமாயிற்று.

**இலங்கையில் தொழிற் சங்க இயக்கத்தின் ஆரம்பம்:**

இந்தியத் தோட்டத் தொழிலாளர் எதிர்நோக்கிய இன்னல்களுக்கும், அவர்கள் அனுபவித்த துன்பங்களுக்கும் பரிகாரம் தேடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளிலிருந்துதான் இலங்கையில் தொழிற் சங்க இயக்கம் ஆரம்பித்தது.

இலங்கையில் முதலாவது தொழிலாளர் சங்கம் 1919 யூன் 25 ஆம் நாள், சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அச்சங்கத்தின் பெயர் இலங்கைத் தொழிலாளர் சேம நல அபிவிருத்திச் சங்கம் (Ceylon Workers' Welfare League) என் பதாகும்.

சேர். பொன் அருணாசலம் அவர்கள் அதன் முதற் தலைவராகவும் திரு. பெரி சுந்தரம் அதன் முதல் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் நோக்கம், அதன் விதிகளில் பின்வருமாறு கூறப்பட்டது.

இலங்கையிலுள்ள தொழிலாள வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாத்தலும், அவர்களது சேமாபிவிருத்தியை அதிகரித்தலும், அவர்களது தொழில் நிலைகளைச் சீர்திருத்தலும், அன்னாரது லௌகீக, ஆத்மீக அபிவிருத்திக்கு உதவுதலும், மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றிய பிரச்சினைகளைக் கற்றறிதலை ஊக்குவித்தலும்" ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாக தீபம்...

தியாக தீபம் திலீபனின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நேற்று செவ்வாய்க்கிழமை நல்லூரில் அனுஷ்டிக்கப்பட்டது.

திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டாம் நாள் நினைவேந்தல் நேற்று நடைபெற்றது.

இதன்போது சுடரேற்றி, மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-7,33)

## போதைப்...

பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

22 முதல் 60 வயதுக்குட்பட்ட பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மொத்தம் 598 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக 27,580 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## முன்னாள்...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குடியிருப்புகள் உள்ளிட்ட விசேட சலுகைகளை இரத்துச் செய்யும் புதிய சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தத் தொடங்கியுள்ளது.

சில முன்னாள் ஜனாதிபதிகள் ஓய்வுபெற்ற பிறகும் பல தசாப்தங்களாக அரச இல்லங்களில் வசித்து வந்ததாகவும் சிலரின் குடும்பங்கள் தலைமுறை தோறும் அங்கு வாழ்ந்த சம்பவங்களும் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒருவர் 31 ஆண்டுகள் அரசாங்க வீடுகளில் வாழ்ந்துள்ளார். மற்றொருவர் 1984 முதல் 2015 வரை அமைச்சராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் அரச குடியிருப்பைப் பயன்படுத்தியுள்ளார். இது அரசியல் கலாசாரத்தில் முரண்பாடாக மாறியுள்ளது.

இந்தச் சட்டம் தற்போதைய ஜனாதிபதிக்கும் பதவிக்காலம் முடிந்த பின் பொருந்தும் என்றும் மக்கள் விருப்பத்துக்கு இணங்க அரசாங்கம் இந்த மாற்றத்தைச் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த இல்லங்கள் முழுமையாக ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவற்றின் சந்தைப் பெறுமதியை மதிப்பீடு செய்து பொருளாதார ரீதியாக உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிப்பதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (ம-7)

## 2,234 மில்லி...

றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

2006ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் துணை சுகாதார விஞ்ஞானம் தொடர்பான பட்டப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதன்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல் மற்றும் தாதியியல் துறைகளில் மூன்று பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது இங்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் மற்றும் உடற்கல்வி ஆகிய நான்கு பாடத்துறைகளில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 952 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

2017ஆம் ஆண்டு துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தாலும் நிதி நெருக்கடி காரணமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இதன் காரணமாக பீடத்திற்கு மோசமான உட்கட்டமைப்பு வசதிப் பற்றாக்குறை நிலவி வருகிறது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகம், ஆய்வுக்கட்டுரை அறை, பரீட்சை மண்டபம் மற்றும் கேட்போர்கூடம் ஆகிய வசதிகளைக் கொண்ட ஒரு புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. (ம-7)

## கிளைமோர்...

பாதாள உலகக் கும்பலுக்கு மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவ லெப்டினனட் கேணலிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இது தெரியவந்தது.

சந்தேகத்திற்குரிய லெப்டினன்ட் கேணலிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, பல சந்தர்ப்பங்களில் தன்னை தொலைபேசியில் அழைத்த கமாண்டோ சாலிந்தா, இரண்டு கிளைமோர் குண்டுகளைக் கேட்டு வற்புறுத்தியதாகக் கூறியுள்ளார். இருப்பினும் சந்தேகத்திற்குரிய லெப்டினன்ட் கேணல், இரண்டு கிளைமோர் குண்டுகளை கமாண்டோ சாலிந்தாவிடம் கொடுத்திருக்கலாம் என்று விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

பத்திரிகையாளராக மாறுவேடமிட்டு ஹரக் கட்டாவைக் கொல்லும் திட்டம் தோல்வியடைந்தால், அடுத்த தாக்குதல் திட்டமாக கெஹல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சாலிந்தா இந்த கிளைமோர் குண்டுத் தாக்குதலை நடத்தத் தயாராகி இருந்துள்ளனர்.

ஹரக் கட்டாவை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பஸ் புதுக்கடை நீதிமன்றத்தை நெருங்கும்போது, நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள சாலையில் ஒரு மோட்டார் சைக்கிளில் கிளைமோர் குண்டை மறைத்து ரிமோட் கண்ட்ரோலைப் பயன்படுத்தி வெடிக்க வைப்பதே பாதாள உலகக் கும்பலின் திட்டமாக இருந்ததாக தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் இந்த பாதாள உலகக் கும்பல் கைது செய்யப்பட்டதால் ஒரு பெரிய பேரழிவு தவிர்க்கப்பட்டதாக பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன: பத்திரிகையாளராக மாறுவேடமிட்டு கமராவில் துப்பாக்கியைப் பொருத்தி அதைச் செயற்படுத்துவதன் மூலம் ஹரக் கட்டாவைக் கொல்லும் திட்டம் முன்பே தெரியவந்தது.

தாக்குதலில் ஈடுபடவிருந்த நபர் கைது செய்யப்பட்டார். தாக்குதலில் பயன்படுத்தத் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியும் முன்னர் கைப்பற்றப்பட்டது. பத்மே மற்றும் பாதாள உலகக் கும்பல் கைது செய்யப்பட்டவுடன், அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. மேலும் திட்டத்தை தயாரித்தவர் அதற்குப் பயன்படுத்தப்பட்ட கமராவையும் தீயிட்டு அழித்தார்.

கமாண்டோ சாலிந்தவுக்கு ஆயுதங்களை விற்றதாகக் கூறப்படும் லெப்டினன்ட் கேர்னல், பேலிகொட குற்றப்பிரிவால் கைது செய்யப்பட்டு, தற்போது குற்றப் புலனாய்வுத் துறையில் விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3899) 076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளை தேவை


1. கைதடி - வண்ணார்பண்ணை, இந்து, 1998, விசாகம், Bachelor of Arts (BA) Majoring in Politics University of otago, Graduate, policy analyst in Newzealand treasury, New zealand citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53788
2. சுன்னாகம், இந்து, 1997, கார்த்திகை, Msc in Bio Medical science, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளைதேவை.53836
3. கந்தர்மடம், நல்லூர், இந்து, 2002, பூரட்டாதி, BSc Software Engnreeing, E.soft பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.53813
4. அளவெட்டி - உரும்பிராய், இந்து, 1999, உத்தரம், Chef School (George Brown College), canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53256
5. சங்கானை- KKS, இந்து, 1999, அத்தம், Bsc, Accounting Economics, uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34476
6. சித்தங்கேணி, இந்து, 1999, கேட்டை, Msc, phd University of Queen mary, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.49678
7. நெடுந்தீவு, இந்து, 1996, அஸ்வினி, MBBS doctor, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.47836
8. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம், MBBS, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36481
9. கரவெட்டி, இந்து, 1995, அவிட்டம், LLB (university of australia), Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.34149
10. அச்சுவேலி, இந்து, 1998, சதயம், Bsc.eng hons in computer science and engineering (university of morotuwa) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 48542

(5420)

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


# திருகோணமலையில் திலீபனுக்கு அஞ்சலி



(திருகோணமலை)

தியாக தீபம் திலீபனின் 38 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வடகிழக்கில் உணர்வு பூர்வமாக இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் அம்பாறை திருக்கோவில் இருந்து பயணத்தை ஆரம்பித்த திலீபனின் ஊர்தி நேற்று செவ்வாய்க்கிழமை (16) திருகோணமலையை வந்தடைந்தது. தியாக தீபம் திலீபனுக்கு திருகோணமலை மக்கள் அஞ்சலி செலுத்தினர். (ம-7)


## காயத்திரி திருமண சேவை

1) மணமக்கள் தேவை
2) காண்டம் பார்த்தல்
3) அலுவலக உதவியாளர் வயது 40இற்கு மேல்
4) சகலவித சமையல் தெரிந்தவர்கள் (தங்குமிட வசதியுடன் யாழ்ப்பாணம்)

தொடர்புகட்கு :
076 314 4689
(5422)



## 2026, 2027 A/L

இற்கான

PHYSICS

- Personal & Group Classes
- Tamil & English medium

(5433)

யாழ். நகர் மற்றும் சாவகச்சேரி அண்மித்த பகுதிகளில்

T.Jinthujan
(Bsc. Electronics AT following at university of Colombo)

076 603 4895



## வேலைவாய்ப்பு

நீங்கள் படித்துவிட்டு வேலை தேடிக்கொண்டு இருக்கும் நபரா? அரிய வாய்ப்பு WEC நிறுவனமாகிய எமது நிறுவனத்துக்கு புதிதாக வேலை ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

வெற்றிடங்கள் HR, IT As.Manager , Cashier, Administrator, Advisor போன்ற வெற்றிடங்கள் உள்ளன.

வயதெல்லை : 18 – 30

சம்பளம் : பயிற்சியின்போது (29,500 – 45,000)பயிற்சி பின் (65,000 – 1,25,000)

தகைமை : O/L அல்லது A/L கல்வித்தகைமை கூடிய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

077 202 51 18
074 158 53 71

(1556)



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3898)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com



## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3898)


UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/- Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237


## மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 06 - 1958



மறைவு 11 - 09 - 2025

# செல்லத்துரை தனபாலன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Rome, ஜெர்மனி Dortmund ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தனபாலன் அவர்கள் கடந்த 11.09.2025 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தனலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாநிதி அவர்களின் அன்புக் கணவரும் அச்சுதன் அவர்களின் அன்புத் தந்தையும் தங்கரத்தினம், காலஞ்சென்ற தர்மபாலன், தேவராசா, கலாநிதி, கமலாம்பிகை, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரேமலோசினி, பிரேமலதா, கலைவதனிஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கணேசானந்தன், மனோன்மணி, கமலாதேவி, ஜெயசேனன், இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாகரன், கண்ணதாசன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2025) புதன்கிழமை பகல் ஒரு மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

46, பொற்பதி வீதி,
கொக்குவில்,
021 222 5555

(5441)

தகவல் :
குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நீர்வேலியில் 9.3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மாசுவன் சந்தியில் 750m தூரம் நன்னீர் ஊற்று செம்மண் நிலம் பிரித்துக் கொடுக்கப்படும்.

(C-3901)

077 137 0386
077 470 1472



## விற்பனைக்கு

சாம்பல் வர்ணம் பூசப்பட்ட தரமான 8 சோடி வாங்கு, மேசைகள் தொண்டைமானாற்றில் விற்பனைக்குண்டு.

சோடி - 15,000/=

(1554)

077 711 5876



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் றெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

(5438)

தொடர்புகளுக்கு : விமல்

076 755 8606, 077 638 5683


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது